பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.05.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், எடப்பாளையம் ஏரியில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்) மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

கழகத்தின் மூத்த முன்னோடியும் அண்ணாநகர் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழாவில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். உடன் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆளுங்கட்சி தலைவர் நா.இராமலிங்கம், பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன் மற்றும் கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட

திருக்கோயில் சொத்துக்கள் விவரம் அடங்கிய மூன்றாவது புத்தகம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்!

சென்னை, மே.16-

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 14.05.2025 அன்று ஆணையர் அலுவலகத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்கள் விவரம் அடங்கிய மூன்றாவது புத்தகத்தினை வெளியிட்டார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, நான்கு ஆண்டுகள் நிறைவுற்ற தருணத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் 5 ஆம் ஆண்டிற் குண்டான திட்டத்தையும் அறிவித்து சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மக்களின் செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று அறிவுறுத்தினார். இன்றைக்கு அனைத்து மண்டல இணை ஆணையர் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் விரைவுப்படுத்துவதற்கும் அறிவிக்கப்பட்ட புதிய திட்டப் பணிகளை விரைந்து முடிப்பதற்கும் உண்டான ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு வரலாறு காணாத அளவிற்கு மீட்கப்பட்ட நிலங்களின் எண்ணிக்கையை ஆவணப்படுத்துகின்ற வகையில் ஏற்கனவே பகுதி 1, பகுதி 2 ஆகிய புத்தகத்தை வெளியிட்டிருந்தோம். இன்றைய தினம் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டுள்ள விவரம் அடங்கிய மூன்றாவது புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகளும், தனிநபர் பெயரிலும், கணினி சிட்டாவிலும் தவறுதலாக பதிவான பட்டா மாறுதல்களை சரிசெய்து திருக்கோயில்கள் பெயரில் மீண்டும் பட்டா மாறுதல் செய்யும் பணிகளும் தொடர்ந்து முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. ஒட்டு மொத்தமாக கடந்த 07.05.2021 முதல் 11.05.2025 வரை 971 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7671.23 கோடி மதிப்பீட்டிலான 7560.05 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்த நில மீட்பு வேட்டை என்பது தொடரும் இன்னொரு ஆறு மாதகாலத்திற்குள்ளாக ரூ.10,000 கோடியை நெருங்குகின்ற அளவிற்கு துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சாதனை என்பது தானாக கிடைத்துவிட்ட சாதனை அல்ல. முதலமைச்சர் திருக்கோயில் நிலங்களை மீட்பதற்கென்று ஒரு சிறப்பு திட்டத்தை செயல்படுத்தினார். அதில் ஒரு பகுதியாகத்தான் 38 வருவாய் மாவட்டங்களுக்கும், வட்டாட்சியர்களை வருவாய் துறை மூலம் பெற்றிருக்கின்றோம். அந்த நில அளவை செய்பவர்கள் வட்டாட்சியருக்கு உதவியாக இரண்டு உதவியாளர்களின் நியமித்து தமிழ்நாடு முழுவதும் அவர்களுக்கு தேவையான அனைத்து வகையான வசதிகளையும் ஏற்படுத்தி, உதாரணத்திற்கு ரோவர் கருவி கொண்டு அனைத்தையும் அவர்களுக்கு கொள்முதல் செய்து தந்து அரசுக்கு அவர்களுடைய ஊதியமான ரூ.10.50 கோடியை ஆண்டுதோறும் ஆகின்ற செலவையும் இந்து சமய அறநிலையத் துறை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியதன் விளைவுதான் இறைவன் சொத்து இறைவனுக்கே என்ற வகையில் ரூ.7871.23 கோடி ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்கள் மீட்கப்பட்டு இறைவனை மகிழ்ச்சியோடு வைத்திருக்கின்ற ஒரு மாநிலமாக தமிழ்நாடு அரசு விளங்குகின்றது.

நில அளவை திட்டமானது இரண்டு லட்சம் ஏக்கர் அளவிடுகின்ற பணி வருகின்ற 21.05.2025 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மல்லீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான மேவலூர் குப்பத்தில் சர்வே எண் 40 இல் அமைந்துள்ள 21.61 ஏக்கர் நில அளவிடோடு இரண்டு லட்சம் ஏக்கர் துறையினுடைய நிலங்கள் கண்டறியப்பட்டு, அதற்குண்டான பதாகைகள் வைக்கப்பட்டு HRCE என்ற கல் பதிக்கப்பட்டு 2 லட்சம் ஏக்கர் நிலங்களை அடையாளம் கண்ட ஒரு துறையாக இந்து சமய அறநிலையத்துறை இந்த திராவிட மாடல் ஆட்சியில் தனி பெரும் பெயரை பெற்று இருக்கிறது.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் சாதனைகள் என்று எடுத்துக் கொண்டால் வருகின்ற ஜூன் மாதத்திலேயே 3,000 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவு செய்ய உள்ளோம். நாகப்பட்டினத்தில் வருகின்ற 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கின்ற குடமுழுக்கில் துறையின் சார்பில் நானும் செயலாளரும், ஆணையரும், கூடுதல் ஆணையரும் பங்கேற்று 3,000 திருக்கோயில்கள் திருப்பணிகளை நிறைவு செய்து, 5 ஆண்டு காலத்தில் 3,500 திருக்கோயில்களின் திருப்பணிகளை எட்டுகின்ற அளவிற்கு இந்தத் துறையினுடைய பணி மேலும் வேதப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கு அரசு நிதியை ரூ.2.5 லட்சமாக உயர்த்தி, தலா 1,250 திருக்கோயில்கள் என்று இருந்த எண்ணிக்கையை கிட்டத்தட்ட 10,000 திருக்கோயில்களுக்கு தற்போது திருப்பணிகள் சத்தம் இல்லாமல் எந்த விதமான ஒரு விளம்பரமும் இல்லாமல் அமைதியாக திருப்பணிகளை மேற்கொண்டு இருக்கின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அதே போல் பல திருக்கோயில்களில் விளக்கேற்றுவதற்கு கூட போதிய நிதி வசதி இல்லாமல் இருந்த திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தின் மூலம் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 12,946 திருக்கோயில் என்றிருந்த எண்ணிக்கையை 18,000 ஆக உயர்த்தியும், மேலும் இந்தாண்டு ஆயிரம் திருக்கோயில்களை கூடுதலாக்கி இதுவரையில் ஒருகால பூஜை திட்டத்தில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு மட்டும் ரூ.304 கோடி அரசு நிதியாக வழங்கிய அரசு தமிழ்நாடு முதலமைச்சர் உடைய அரசு. திருக்கோயிலில் பணிபுரிகின்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இது வரையில் எந்த விதமான சிறு தொகையும் அரசின் சார்பிலே வழங்கப்படவில்லை. முதன்முதலாக தமிழக முதல்வர் சிந்தையில் தோன்றிட்ட திட்டத்தால்தான் திருக்கோயிலில் பணியாற்றுகின்ற அர்ச்சகர் மற்றும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வங்கிக் கணக்கிலே செலுத்தி அவர்களுக்கும் ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்தி தந்த ஆட்சி இந்த ஆட்சி.

50 ஆண்டுகளுக்கு மேல் திராவிட மாடல் ஆட்சியின் பெருமைகளை பறைசாற்றுகின்ற அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறை சாதனைகள் தொடரும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தில் ஆணையர் தான் ஆக்கிரமிப்பாளர்கள் மீது புகார் கொடுக்கலாம் என்ற ஒரு நிலை இருந்தது. ஆக்கிரமிப்பாளர்கள் மீது யார் வேண்டுமானாலும் புகார் கொடுக்கலாம் என்று சட்ட திருத்தத்தை கொண்டு வந்த ஆட்சி இந்த ஆட்சி. ஆகவே இப்படி ஆக்கிரமிப்பாளர்களின் மீது பெறப்படுகின்ற அனைத்து புகார்களின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்து சமய அறநிலையத்துறையில் முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியில் பெரிய சட்ட போராட்டத்தில் தொடர்ந்து பல வெற்றிகளை துறை பெற்று இருந்தாலும் இன்றைய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெரும் மகிழ்ச்சியை இத்துறை பெற்றுள்ளது. நீதிமன்ற உத்தரவின் படி மூத்த வழக்கறிஞர்கள் டெல்லியில் இருந்து திரும்பியவுடன் அவர்களோடும், உயர் அலுவலர்களுடன் கலந்து ஆலோசனை செய்துஉச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை விரைவுபடுத்தி அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ் எந்தெந்த திருக்கோயில்களிலே ஆகம விதிகள் இல்லாத திருக்கோயில்களில் பணி நியமனங்கள் செய்ய முடியுமோ அதை விரைவுப்படுத்துவதற்கு துறை சார்ந்த ஆலோசனை கூட்டத்தை நடத்த இருக்கின்றோம். முருக பக்தர்கள் போற்றும் வகையில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்திக் காட்டிய பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு.

வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை காத்திடும் வகையில் அதிகமாக பக்தர்கள் கூடுகின்ற அனைத்து திருக்கோயில்களிலும் தேங்காய் நார் விரிப்புகள் (காயர் மேட்) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல் திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கட்டணமில்லாமல் மோர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆட்சி ஏற்பட்ட திலிருந்து வீட்டிலேயே இருந்து இறை தரிசனம் செய்து கொண்டிருந்தவர்கள் கூட இன்றைக்கு திருக்கோயிலுக்கு வந்து இறை தரிசனம் செய்ய வேண்டும் என்று ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு காரணம் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளோம்.

ஆண்டுக்கு 3.50 கோடி பக்தர்கள் திருக்கோயில் சார்பில் வழங்கப்படுகின்ற அன்னதானத் திட்டத்தால் பசியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தங்கும் இடங்கள் அனைத்தும் தனியார் தங்கும் இடங்களுக்கு நிகராக இருக்கின்றது. விரைவு தரிசனம் மலைக் கோயிலுக்கு வாகன வசதி, மருத்துவ வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பிட வசதி இப்படி பல்வேறு சிறப்புகளை மேற்கொண்டதால் இன்றைக்கு திருவிழாக்கள் தொடங்கி விசேஷ நாட்களில் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுடைய எண்ணிக்கை பாதுகாப்பாக இருப்பதால்தான் அதிக அளவு பக்தர்கள் இன்றைக்கு திருக்கோயிலுக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக சித்ரா பௌர்ணமி முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள் பார்த்தால் மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சி தான் நாம் உற்று நோக்குகின்றோம். தமிழ்நாடு முழுவதும் சித்ரா பௌர்ணமிக்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. எங்களுடைய இந்து சமய அறநிலையத்துறையின் கணக்கின்படி பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு கோடியே 75 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த சித்ரா பௌர்ணமி திருநாளில் இறை தரிசனத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆங்காங்கே ஏதோ ஒரு சூழ்நிலைக்கு நடந்த சில சம்பவங்களை தவிர்த்து பெரும்பாலான இடங்களில் 99.99 சதவித இடங்களில் சிறப்பாக இருந்தது மேற்கொண்டதால் மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, ந.திருமகள், சி.ஹரிப்ரியா, மா.கவிதா, பொ.ஜெயராமன், தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) / மாவட்ட வருவாய் அலுவலர்கள் சு.ஜானகி, தி.சுப்பையா, பா.பூங்கொடி, கா.பரமேஸ்வரி இணை ஆணையர்கள் சு.ஜானகி, தி.சுப்பையா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (14.05.2025) சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்கள் விவரம் அடங்கிய மூன்றாவது புத்தகத்தினை வெளியிட்டார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, ந.திருமகள், சி.ஹரிப்ரியா, திருமதி.மா. கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/1710/2025 — **குறுகிய கால திறந்தவெளி மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பொது தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் Renovate, Operate, Transfer (ROT) அடிப்படையில் சென்னை மாநகராட்சியின் நவீன பேருந்து நிலையங்களை சீரமைத்து பராமரிக்க ஒப்பந்ததாரரை தேர்வு செய்வதற்காக Detailed Feasibility Report (DFR) மற்றும் ஏல செயல்முறை மேலாண்மை சேவைகளைத் தயாரிப்பதற்கான ஆலோசகரை நியமித்தல்.

பணியின் உத்தேச தொகை ரூ.48.00 லட்சம்

முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **22.05.2025** அன்று மாலை **3.00 மணி** வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **22.05.2025** அன்று மாலை **3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2311 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

வக்ஃப் சட்டத்துக்கு எதிரான தடை - 20ஆம் தேதி வரை நீட்டிப்பு!

உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, மே.16-

வக்ஃப் சட்டத்துக்கு எதிரான இடைக்கால தடையை வரும் 20 ஆம் தேதி நீட்டித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வக்ஃப் வழக்கு விசாரணையை வரும் 20 ஆம் தேதிக்கு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு ஒத்திவைத்துள்ளது. இஸ்லாமியர்கள் தானமாகவும், நன்கொடையாகவும் அளிக்கும் நிலங்கள் மற்றும் சொத்துகளை வக்ஃப் வாரியம் நிர்வகித்து வருகிறது. 1995ஆம் ஆண்டின் வக்ஃப் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் ஒன்றிய அரசு புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

ஒன்றிய அரசின் வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராக காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இந்த மனுக்கள் கடந்த மாதம் விசாரணைக்கு வந்த போது, திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள இடைக்காலத் தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்குப் புதிதாக பதவியேற்றுள்ள தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு முன் நேற்று விசாரணை வந்தது. அப்போது, இந்த வழக்கு தொடர்பாக, விரிவான பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் வழக்கறிஞர் தெரிவித்தார். இடைக்காலத் தடை குறித்து முதலில் விசாரிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுத் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும், வழக்கின் விசாரணை குறித்த சுருக்க வாதங்களை இரு தரப்பும் தாக்கல் செய்ய நீதிபதிகள் ஆலோசனை வழங்கினர்.

அப்போது, நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் இருந்த திரிணாமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாண் பானர்ஜி தனக்கும் வாதிட நேரம் வழங்க வேண்டும் என்று கூறினார்.

வக்ஃப் சட்டத்துக்கு எதிரான இடைக்காலத் தடையை 20 ஆம் தேதி நீட்டித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், வழக்கின் விசாரணைக்கு 4 மணிநேரம் ஒதுக்கப்படும் என்றும் தெரிவித்தனர். இதையடுத்து, அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, வக்ஃப் வழக்கு விசாரணையை வரும் 20 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இன்று வெளியாகிறது!

10 மற்றும் 11ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிடுகிறார்!

சென்னை, மே 16 -

மே 19-ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த 10 மற்றும் 11ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள், முன்கூட்டியே இன்று (16ஆம் தேதி) வெளியிடப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 10 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு நடைபெற்றது. 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வை சுமார் 9 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எழுதினர். இதேபோல், 11ம் வகுப்பு பொதுத்தேர்வை 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எழுதினர். தேர்வு முடிவுகள் மே 19ஆம் தேதி வெளியிடப்படும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தநிலையில், 12ம் வகுப்பு தேர்வு முடிவு போல, 10 மற்றும் 11ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளும் முன்கூட்டியே வெளியிடப்படவுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் இன்று (16ஆம் தேதி) 10 மற்றும் 11ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ளன. காலை 9 மணிக்கு 10ம் வகுப்பு தேர்வு முடிவுகளும், பிற்பகல் 2 மணிக்கு 11ம் வகுப்பு தேர்வு முடிவுகளும் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் நடைபெறும் நிகழ்வில், 10 மற்றும் 11ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிடவுள்ளார்.

www.results.digilocker.gov.in, www.tnresults.nic.in என்ற இணையதளங்களில் மாணவர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். மாணவர்கள் அளித்துள்ள கைப்பேசி எண்ணுக்கும் தேர்வு முடிவுகள் அனுப்பி வைக்கப்படும்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்துகொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோரிடம் கேட்டுக்கொண்டார். தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் நலவாழ்வு சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானவர் உடன் இருந்தனர்.